# புல்மோட்டையில் கண்ணிவெடி; 6 இராணுவம் பலி!


விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 16 இதழ் 146

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 30 - 6 - 1995


## ஜீப் சுக்கு நூறாகியது

(திருகோணமலை)

புல்மோட்டையில் நேற்று நிகழ்ந்த கண்ணிவெடித் தாக்குதலொன்றில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

நேற்று பகல் 11-30 மணியளவில் இத்தாக்குதல் நிகழ்ந்துள்ளது.

புல்மோட்டை- திருகோணமலை வீதியில் இருபத்து மூன்றாவது மைல் கல்லுக்கு அருகில் இச்சம்பவம் நிகழ்ந்ததாக இராணுவ நடவடிக்கைகள் தலைமைச் செயலகம் நேற்று தெரிவித்தது.

(6ம் பக்கம் பார்க்க)

## நேற்றும் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு இராணுவ முகாம் பகுதியிலிருந்து இராணுவத்தினர் நேற்று பிற்பகல் 1-30 மணியளவில் கரையோரப்பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

ஷெல்கள் குருநகர், பண்ணை கடற்பகுதியில் வீழ்ந்து வெடித்ததாக தெரிவிக்கப்பட்டது'

இதனைவிட இராணுவத்தினர் கரையோரப்பகுதிகளை நோக்கி இடையிடையே கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டனர், (90-170-கி)

# அழிக்கப்பட்ட மண்டைதீவு முகாம் பகுதியிலிருந்து

# இரு உயர் அதிகாரிகள் உட்பட

# 90 படையினரின் சடலம் மீட்பு!

## பிரிகேடியர் முனசிங்க நேற்று அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட மண்டைதீவு இராணுவ முகாம் பகுதியிலிருந்து இதுவரை இரு அதிகாரிகள் உட்பட 90 இராணுவத்தினரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் சடலங்கள்தொடர்ந்தும் மீட்கப்பட்டு வருவதனால் இறந்த ராணுவத்தினரின் தொகை மேலும் அதிகரிக்கலாமெனவும் இராணுவபேச்சாளர் பிரிகேடியர் சரத் [முனசிங்க நேற்றுகொழும்பில் தெரிவித்துள்ளார்.

[ 6ம் பக்கம் பார்க்க ]

## மாவீரர்களின் வித்துடல் ஊர்தி பவனி இன்று

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்த எட்டு மாவீரர்களில் ஆறு மாவீரர்களது வித்துடல்கள் தாங்கிய ஊர்தி பவனி இன்று காலை 10 மணிக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள அரசியல் துறை மாவட்டச் செயலகத்தில இருந்து ஆரம்பிக்கும்

காங்கேசன்துறை வீதி வழியாக வைத்தியசாலைச் சந்தியை காலை 10-20 மணிக்கு

(2-ம் பக்கம் பார்க்க)

## இராணுவத்துக்கு பலத்த அடி சர்வதேச விமர்சகர்கள் கருத்து

(கொழும்பு)

இராணுவத்தினர் சிறந்த உளவுப்படையை கொண்டிருந்தும்கூட விடுதலைப் புலிகளிடம் இருந்து மண்டைதீவு முகாமை நோக்கிய பாரிய தாக்குதலை எதிர்கொள்ள நேர்ந்தமை குறித்து சர்வதேச விமர்சகர்கள் பலர் ஆச்சரியம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் மண்டைதீவுப் பகுதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய தாக்குதலானது இராணுவத்தினருக்கு கொடுக்கப்பட்ட பலத்த அடியென விமர்சகர்களும், பத்திரிகையாளர்களும் கருத்து வெளியிட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் விடுதலைப் புலிகளின் இத்தகைய தாக்குதலானது வியப்பையும் அச்சத்தையும் தோற்றுவித்துள்ளதாகவும், நன்கு திட்டமிட்டு நடாத்தப்பட்ட தாக்குதல் இது என்றும் இராணுவம் இவ்விடயத்தில் ஏமாந்து விட்டது என்றும் விமர்சகர்கள் மட்டத்தில் கருந்து வெளியிடப்பட்டுள்ளதும் நோக்கத்தக்கது.

(6ம் பக்கம் பார்க்க)

## சர்வதேச வானொலிகளில் தாக்குதல் செய்திக்கு முக்கியத்துவம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலை சர்வதேச செய்தி ஸ்தாபனங்கள் முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டுள்ளன.

வொய்ஸ் ஒவ் அமெரிக்கா, நெதர்லண்ட் வானொலி, ஜேர்மன் வானொலி, அவுஸ்திரேலிய வானொலி, பி. பி. ஸி. உட்பட பல ஒலிபரப்பு நிலையங்கள் முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டுள்ளன.

சர்வதேச பத்திரிகைகள் பலவும் இச்செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-கி)

## மண்டைதீவு இழப்பினால் சந்திரிகாவின் பிறந்ததின வைபவம் சோபையிழந்தது

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா நேற்று தனது ஐம்பதாவது பிறந்த நாள் விழாவை மத வழிபாட்டுடன் நிறுத்திக்கொண்டார்.

பிறந்த நாளையொட்டி ஜனாதிபதி மாளிகையில் நேற்று சிறிய வைபவம் ஒன்றுக்கு ஏற்பாடாகியிருந்தது.

நேற்று முன்தினமிரவு விடுதலைப் புலிகளால் மண்டைதீவு இராணுவ முகாம் முற்றாகத் தாக்கி அழிக்கப்பட்டு நூற்றுக் கணக்கில் இராணுவத்தி

(6 ம் பக்கம் பார்க்க)

## ஹெப்பிட்டிகொலாவ வாசிகள் வெளியேறுகிறார்கள்

[கொழும்பு)

நேற்றுமுன்தினம் மதவாச்சி ஹெப்பிட்டிகொல்லாவ பகுதியில் பொலிசார் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதி குடியேற்றவாசிகள் மத்தியிசு பதற்றம் ஏற்பட்டுள்ளதாக

(6ம் பக்கம் பார்க்க)

## தண்ணீர் தாங்கி மேலேறி பொலிஸார் மறியல்

(கொழும்பு)

திஸ்ஸமகரகம பொலிஸ் நிலையத்தில் இரு பொலிசாரை வேலை நீக்கியதை ஆட்சேபித்து அங்கு கடமையாற்றும் 21 பொலிசார் தண்ணீர்த் தாங்கி மேலேறி போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றனர் என்று 'வெரித்தாஸ்' சிங்கள சேவை தெரிவித்தது.

இந்த இரண்டு பொலிசாரும் பொதுமகன் ஒருவரைத் தாக்கியதாலேயே, வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தாங்கி மேலிருக்கும் பொலிசாரை இறங்குமாறு கோரிக்கைவிடப்பட்ட போதிலும் வேலைநீக்கம்செய்யப்பட்டஇவ் இரண்டு பொலிசாருக்கு வேலை வழங்கினால் மட்டுமே கீழே இறங்க முடியுமென அவர்கள் அறிவித்துள்ளனர் என்று 'வெரித்தாஸ்' மேலும் தெரிவித்தது ம-கி

## மண்டைதீவு ராணுவம் சுட்டு குருநகர் மீனவர் காயம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுப் பக்கமாக சிறுதீவு கடற் பிராந்தியத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களை நோக்கி இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஒருவர் தலையில் சூடு பட்டு காயமடைந்தார்.

நேற்றுக் காலை 11-40 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அட்டை பிடித்துக் கொண்டிருந்தவர்களை நோக்கியே மண்டைதீவுப் பகுதியில் இருந்து இராணுவம் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது.

(6-ம் பக்கம் பார்க்க)

## ஒப்பந்த மீறலின் பின்னரான மிக மோசமான தாக்குதல்

[கொழும்பு[

போர் நிறுத்த மீறலின்பின்னர் மண்டைதீவில்தான் இராணுவத்துக்கும்-விடுதலைப் புலிகளுக்குமிடையில் முதன் முறையாக நேரடிமோதல் நடைபெற்றுள்ளது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்-

இது ஒரு மிக மோசமான தாக்குதலாகும். விமானப்

(6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### புலமைப் பரிசில்

ஆண்டு - 5 புலமைப் பரிசில் தேர்வுக்கான வினாப் பத்திரம் 1, வினாப் பத்திரம் 2 க்குரிய "பொது விவேகம், பொதறிவு" வெளிவந்துவிட்டது. வெளியீடு: சுப்பிரமணிய புத்தகசாலை - யாழ்ப்பாணம், (ஏ-5027)

### சேவை

போட்டோ ஸ்ரட் - 5/- (காகிதாதிகள் தனி) பெருப்பித்தும் (205%) சிறுப்பித்தும் (48%) கொடுக்கப்படும். 100 ரேுணியோ 19/- இரு பக்கம் 29/- ஸ்ரென்சில்-10/- ரைப்பிங் தமிழ் - 7/- ஆங்கிலம் - 8/50. யாழ் மருந்தகம், 470 (250) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (எ 5036)

## ஆண்டு விழா

(யாழ்ப்பணம்)

பண்ணாகம் அம்பாள் கலை மன்றத்தின் ஆறும் ஆண்டு விழா நாளை சனிக்கிழமை இரவு 7 மணிக்கு பண்ணாகம் ஸ்ரீ முருகன் அன்னதானசபை மண்டபத்தில் த. முரளீதரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி எ.செல்வ நாயகமும் கிராம உத்தியோகத்தர் திருமதி. தி. சிவபாக்கியநாதனும், விளையாட்டுத் துறை ஆசிரியர் பொ. தருமலிங்கமும் கலந்து கொள்வார்

இவ்விழாவில் இசை நிகழ்ச்சிகள், பட்டிமண்டபம், நாடகம் என்பனவும் இடம் பெறும். -ர

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995-06-30**

வெள்ளி இரவு

8-02 மாவீரர்கள் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி வேலணையூர் சுரேஸ் எழுதிய நெஞ்சுல் நிலைத்த நினைவுகள்
8-25 கணப்பொழுது சி. கண்ணம்மா எழுதிய லெப்ரினன்ட் அனித்தா
8-30 செய்திகள்
8-40 அரசியல் அரங்கம்
8-50 ஏர்முனை நிகழ்ச்சியில் சோளம் குறுநாடகம்

**1995 - 07 - 01**

சனி காலை

7-02 மாவீரவணக்கம்
7 15 நீங்கள் கேட்டவை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள் அதனைத் தொடர்ந்து
8-00 மணி வரை நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995-06-30**

வெள்ளி மாலை

5-01 சிந்தனைச்சிதறல்
5-02 எழுச்சிகீதம்
5-10 புதியவை
5-15 கணநேரக்காவியங்கள்
5-30 மண்ணின்குரல்
5-40 நேயர் கடிதங்கள்
5-45 வெற்றிச்சுவடுகள்
6-00 சிந்தனைக்குச் சிலவினாடிகள்
6-02 நாடகம் பொம்பிளை பார்க்கப்போறம் அங்கம் 8
6-15 விளையாட்டுச் செய்திகள் விளையாட்டுச் செய்திகளைத் தொடர்ந்து என் தெரிவு

## ஆன்மீக உரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் வருடாந்த உற்சவத்தையொட்டி இடம் பெற்று வரும் ஆத்மீக பேருரைகளில் இன்று காரை கு. சிவராஜசர்மா ஸ்ரீராமகிருஸ்ணரின் வாழ்வும் பணியும் என்னும் பொருளில் உரையாற்றவுள்ளார். ர-ரி


# பயிற்சி வினாத்தாள்கள்

(விடைகளுடன்)

இரண்டாம் தவணைப் பரீட்சைக்குத்தயாராகும் ஆண்டு- 3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L மாணவர்களுக்காக எல்லா பாடங்களுக்குமான

**பயிற்சி வினாத்தாள்கள் 3-7-95**

முதல் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

**BOND புத்தக நிறுவனம்**

58, A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-5052]



# பட்டப்படிப்புகள் கல்லூரி மாணவர் கவனத்திற்கு

57/48, ஸ்ரான்லி வீதி (இலங்கை வங்கி முன்பாக) அமைந்துள்ள எமது கல்லூரி 01-07-95ல் இருந்து பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்திக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதென்பதை அறியத் தருகின்றேன். எமது தலைமை அலுவலகம் தொடர்ந்தும் 148/1, ஸ்ரான்லி வீதியில் இயங்கும்.

இயக்குநர்,

**பட்டப்படிப்புகள் கல்லூரி,**

148 1 ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

(எ- 5056)



## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

நல்லூர் கந்தசுவாமி கோவில்

1995-ம் ஆண்டு மகோற்சவகாலக்

# தற்காலிக கடைகள்

(1) நல்லூர் இந்து விடுதிக்கு அருகாமையிலும்,
(2) ஆலயம் முன்பாகப் பருத்தித்துறை வீதியிலும்,
(3) கோவில் வீதியில் ஆலயத்திற்கு வடக்குப் பக்கமாகவும்,
(4) பண்டாரமாளிகை வளவில் மாநகரசபை அலுவலகத்திற்கு கிழக்குப் பக்கமாகவும், மேற்குப் பக்கமாகவும்,
(5) பண்டாரமாளிகை வளவில் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்திற்கும்

நிலம் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 14-07-1995ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் படிவக்கட்டணம் ரூபா 100/-ஐயும், மீளளிக்கப்படக்கூடிய பிணையாக ரூபா 500/-ஐயும் செலுத்துவதன் பேரில் 13-07-1995ம் திகதி வியாழக்கிழமை பற்பகல் 3-00 மணிவரை மாநகராட்சி மன்றத்தினால் வழங்கப்படும் கேள்விப் படிவங்களில் (இணைப் பிரதிகளில்) கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 14-07-1995ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்குப் பிந்தாமல் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் சேர்க்கப்படல்வேண்டும்.

கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தில் நானுவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் உரிய வரைபடத்தையும் பார்வையிட முடியும் ஒரு கேள்விப் படிவத்தில் ஒரு காணித் துண்டிற்கான கேள்வி மாத்திரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

★ குறிப்பு: மேற்படி சந்தைப் பகுதியில் அனுமதிக்கப்படும் கடைகள் தவிர முன்கூட்டியே அனுமதி பெற்றிராத எந்த வியாபாரமும் திருவிழாக் காலத்தில் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

வே. பொ. பாலசிங்கம்,

மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம். 1995-06-25

மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

(ஏ 5049)


## மாவீரர்களின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடைந்து, பின் அங்கிருந்து சத்திரத்துச்சந்தி, ஆஸ்பத்திரி முன் வீதி வழியாக நாலாம் குறுக்குத் தெரு, குருநகர் கடற்கரை வீதியூடாக பாசையூர் கனகர் சந்தியை அடைந்து, புங்கங்குளம் வீதி, கண்டி வீதி ஊடாக அரியாலையை 10-55 க்கு அடையும்.

அங்கிருந்து கண்டி வீதி வழியாக நாவற்குழி கைதடி ஊடாக சாவகச்சேரியை காலை 11-20 க்கு வந்தடையும். பின் அங்கிருந்து கொடிகாமம் ஊடாக எழுதுமட்டுவாள் சந்தியை 12-30 க்கு வந்தடையும். பின்னர் எழுதுமட்டுவாள் நாகர் கோவில் வீதி வழியாக நாகர்கோயிலை பி, ப. 12-50க்கு வந்தடையும், பின்னர் பருத்தித்துறை வீதியூடாக மந்திகைச் சந்தியை வந்தடைந்து பின் பருத்தித்துறை சிவன்கோவிலடிக்கு பி.ப. 2-10 க்கு வந்தடையும். அங்கு நினைவஞ்சலிக்கூட்டம் நடாத்தப்படும் பின் பருத்தித்துறை பஸ் நிலையம் ஊடாக வல்வெட்டித்துறையை 2-40க்கு வந்தடையும். பின்னர் உடுப்பிட்டி ஊடாக நெல்லியடிக்கு 3-05 க்கு வந்தடையும்.

பின்னர் புருப்பொறுக்கிச் சந்தி கப்பூது ஊடாக கனகம் புளியடி சந்தியை 4 மணிக்கு வந்தடையும் 4-25 மணிக்கு புத்தூரை வந்தடைந்து பின்னர் கோப்பாய், கல்வியங்காடு, நல்லூர் ஊடாக யாழ் பஸ் நிலையத்தை பி. ப. 5 00 மணிக்கு வந்தடையும். அங்கு நினைவஞ்சலிக்கூட்டம் நடாத்தப்படும. பின்னர் பலாலிவீதி வழியாக திருநெல்வேலி, கோண்டாவில் சந்தியை வந்தடைந்து அங்கிருந்து இருபாலை வீதியூடாக இராச வீதியை அடைந்து. இராச வீதி ஊடாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு பி. ப. 6-00 மணிக்கு வந்தடையும்.

அங்கே இறுதி இராணுவ மரியாதைகளுடன் புனித விதைகுழியில் லெப் கேணல் சூட்டி, மேஜர் தமிழ்மாறன்-கஜேந்திரன். கப்டன் எழிற்செல்வன்-ஜவான், லெப். அகிலன், 2ம் லெப், இசையழகன் -கிறிஸ்ரி, வீரவேங்கை பாமினி ஆகிய மாவீரர்களது வித்துடல்கள் விதைக்கப்படும். (கி)


# சந்தா விநியோகம்

"ஈழநாடு" பத்திரிகை

யாழ். மாநகரசபை எல்லைகுள் நாளாந்தம் உங்கள் வீடுகளுக்கு

விநியோக கட்டணம் எதுவுமின்றி

விநியோகம் செய்ய

ஏறபாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சந்தா பத்திரிகைகள்

தினமும் அதிகாலை 6-00 மணிக்கு முன் எமது காரியாலய விநியோகப் பையன்களால் உங்கள் வீடுகளுக்கு விநியோகம் செய்யப்படும்.

ஃ சந்தா கட்டணம்

| 1 வருடம் | 6 மாதம் | 3 மாதம் | 1 மாதம் |
|---|---|---|---|
| 1800/- | 900/- | 450/- | 150/- |

★ தங்கள் சந்தாவுக்கு நிறுவனத்துடன் காரியாலய நேரங்களில் தொடர்பு கொள்ளவும்.

விநியோக முகாமையாளர்,

**ஈழநாடு லிமிட்டெட்,**

யாழ்ப்பாணம்.

(ஏ-5045)



# A/L 95

பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கு

| | |
|---|---|
| இரசாயனவியல் | பொருளியல் |
| பௌதீகவியல் | கணக்கியல் |
| தாவரவியல் | வர்த்தகம் |
| விலங்கியல் | அளவையியல் |
| தூயகணிதம் | தமிழ் |
| பிரயோககணிதம் | புவியியல் |
| இந்து நாகரிகம் | கிறிஸ்தவம் |
| இந்துசமயம் | அரசியல் |

நாடகமும் அரங்கியலும்

ஆகிய பாடங்களுக்குரிய மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் 3 - 7 - 95 முதல் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

இப் பாடங்களுக்கான இலவசக் கல்விக் கருத்தரங்கு 1, 2ம் திகதிகளில் நடைபெறும்.

**BOND புத்தக நிறுவனம்**

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(ஏ-5051)

**மணிவாக்கு**

துன்பத்தை அனுபவித்தகாலத்தை மறந்து விடு. ஆனால் அது உனக்குக் கற்பித்த பாடத்தை மறந்து விடாதே

- அல்போனியா

# யாழ்.மீதான பாரிய தாக்குதல் திட்டத்தை மண்டைதீவுத் தாக்குதல் முறியடித்தது

(லண்டன்)

மண்டைதீவு மீதான விடுதலைப் புலிகளின் வெற்றிகரத் தாக்குதல், யாழ்ப்பாணம் மீது இராணுவம் தொடுக்க எண்ணிய பாரிய இராணுவ நடவடிக்கையை முறியடித்துள்ளதாக பி. பி. ஸி தெரிவித்துள்ளது

பி. பி. ஸி செய்தியாளர் மேலும் தெரிவிக்கையில்; மண்டைதீவு இராணுவத் தளம் யாழ்ப்பாணம் மீதான இராணுவ நடவடிக்கைக்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகக் கருதப்பட்டவேளை இத்தாக்குதல் தொடுக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் இந்தத் தாக்குதலானது, இராணுவம் யாழ்ப்பாணம் மீது தொடுக்க எண்ணிய பாரிய நடவடிக்கைகளை பின்னடையச் செய்துள்ளது.

மண்டைதீவு தாக்குதல் பற்றி விபரித்த இராணுவ அதிகாரிஒருவர், இப்பகுதியில் புலிகள் மேற்கொண்ட பாரிய தாக்குதல் இதுவாகும எனக் குறிப்பிட்டுள்ளார்.

மண்டைதீவை மீள தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வரவும் கூடியதாக பலப்படுத்தவும் அயலிலுள்ள இராணுவ தளங்களிலிருந்து மேலதிக துருப்புகள் அங்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஏப்பிரல 19ம்திகதி போர் நிறுத்த உடன்பாடு முறிவடைந்த பின், சுமார் 465 படையினர் பலியாகியுள்ளனர். விடுதலைப் புலிகள் மீது கடுமையான இராணுவ நடவடிக்கை எடுக்கவேண்டுமென தூண்டிவரும் தென்பகுதித் தீவிரவாத சிந்தனையாளர்கட்கு இந்த இராணுவ இழப்பீடுகள் பெரும் பேரிடியைக் கொடுத்துள்ளது எனவும் பி. பி. ஸி. மேலும் அச்செய்தியில் தெரிவித்துள்ளது. (கே.சி)

## நமது நோக்கு

### இராணுவ மூலோபாயம்

விடுதலைப்புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பமானால் கடும் நிபந்தனையுடனேயே அரசு பேச்சுவார்த்தையை நடத்தும். வடக்கு-கிழக்கில் யுத்தத்தை அரைவாசியோடுசெய்துமுடிக்க அரசு விரும்பவில்லை. ஆகக்கூடிய வளங்களைப் பாவித்துஇந்தயுத்தத்தை முழுமையாக கொண்டு நடத்துவதற்கு அரசாங்கம் ஆயத்த நிலையிலுள்ளது. இவையெல்லாம் ஜனாதிபதி சந்திரிக்காவின் வாயிலிருந்து உதிர்ந்தவைகள்.

இஸ்ரேல் இந்தியா போன்ற நாடுகளின்உதவியுடனும் மேற்கு உலக நாடுகளிலிருந்து பெறப்பட்ட, பெறப்பட உள்ள நவீன ஆயுதத்தளபாடங்களின் உதவியுடனும் தமிழர்களின் துரோகிகளாகிவிட்ட ஈ. பி. டி. பி. யினருக்கு நவீன ஆயுதங்களை வழங்குவதன்மூலமும் குடாநாட்டை ஆக்கிரமித்து விடுதலைப்புலிகளை தோற்கடிப்பேன் என்று ஜனாதிபதி சந்திரிக்காவும் பாதுகாப்புப் பிரதிஅமைச்சர் ரத்வத்தையும் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் தேசியத்தலைவர் பிரபாகரனின் வழிகாட்டலின் பேரிலும் நேரடிக் கட்டளை மூலம் நெறிப்படுத்தப்பட்ட மண்டைதீவுத் தாக்குதல் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

தேசியத்தலைவரின் இச் செயல்பாட்டால்வடக்குப் போர்முனையில் பௌத்த சிங்களப் பேரினவாதம் வகுத்த போர் மூலோபாயம் சிதறடிக்கப்பட்டுள்ளது. வடக்கை கைப்பற்றி விடுதலைப்புலிகளைத் தோற்கடித்து ஏனைய உதிரித்தமிழ் குழுக்களுடன் பேச்சுவார்த்தை என்ற பெயரில் ஒரு நாடகமாடி தமிழர்களின் மீது ஒரு அரைவேக்காட்டுத் தீர்வைத்திணிப்பதற்கு கனவு கண்டுகொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு எழுந்திருக்கமுடியாத பாரிய அடியை தலைவர் பிரபாகரன் கொடுத்துள்ளார். கிழக்கையும் இழக்கும் நிலையில் உள்ள அரசுக்கு மண்டை தீவு மீதான வெற்றிகரமான தாக்குதல் பேரிடியைக் கொடுத்துள்ளது.

சிறிலங்கா அரசும் இராணுவமும் தங்களது முழு போர்மூலோபாயத்தையே மாற்றியமைக்க வேண்டியுள்ளது. எத்தனை தடவைதான் போர் மூலோபாயங்களை மாற்றி அமைத்தால்தான் என்ன, தளபதிகளை மாற்றியமைத்தால்தான் என்ன இன விடுதலைப் போராட்டத்தை ஒழித்துவிடமுடியாது. சிறிலங்கா இராணுவம் அகலக் காலைவிரித்துவிட்டது. ஆனால் அவர்கள் ஆக்கிரமித்த இடங்களை தக்கவைக்க முடியாது. இதைப் பல தடவைகளில் சிறிலங்கா அரசு கடந்த காலத்தில் நேரடி அனுபவம் மூலம் அறிந்திருந்தும் திரும்பத் திரும்ப அதே பிழையை விட்டுக் கொண்டேயிருக்கிறது.

சிறிலங்கா அரசுக்கும் இராணுவத்துக்கும் தற்போதுள்ள ஒரே ஒரு மார்க்கம் இராணுவ முகாம்களை மூடி படையினரைத்திருப்பி அழைத்துவிட்டு விடுதலைப்புலிகளுடன் நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தை செய்து இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதேயாகும்.

# அரச நிறுவன நிதி மோசடிகள்: விசாரணைக்கு ஆணைக்குழு நியமனம்

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் இடம் பெறும் நிதி மோசடிகள் சம்பந்தமான விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இரண்டு விசேட ஜனாதிபதி ஆணைக் குழுக்களை நியமித்துள்ளார்.

இவற்றிற்கு மேலதிகமாக பல அமைச்சுக்களும் கூட்டுத்தாபனங்களும் அவற்றின் தற்காலிக நடவடிக்கைகளை ஆராய்வதற்கென விசாரணைக் குழுக்களை நியமித்துள்ளன.

இலங்கை பெருந் தொகையான வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுள்ளது. எனினும் 30 சதவீதத்துக்கும் குறைவான தொகையே பயன் படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உலக வங்கி, சர்வதேச நாணய சபை ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற அன்பளிப்பு அமைப்புகள் இலங்கை அதன் நிதிகளை பூரணமாக பயன்படுத்தவில்லை என்று ஏற்கனவே எச்சரிக்கை செய்துள்ளன.

வெளிநாட்டு நிதிகள் உரிய முறையிலும் பூரணமாகவும் பயன்படுத்தப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தவும் ஜனாதிபதி விசேட கணகாணிப்பு குழுவொன்றை நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. -ரி

## பலதும் பத்தும்

### மொழித்தூய்மை

தொழில் நுட்பம் வளர்ந்து...... தொடர்புச் சாதனங்கள்பெருகி... உலகம் மிகச் சுருங்கி விட்டாலும் இன்றும் பல இன மக்கள் தமது மொழியைத்தூய்மையாக வைத்திருக்கவே விரும்புகிறார்கள்.

சீனர்கள்.. தமது மொழியிற் கலந்து விட்ட பிற மொழிச் சொற்களை நீக்கித் தூய சீனமொழியை 'மண்டரீன்' என அழைக்கிறார்கள். பிரான்ஸ் நாட்டு மக்களும் தமது மொழியில் ஆங்கிலம் கலப்பதை வெறுக்கிறார்கள்.

தமிழகத்தில்... வேதாசலம் என்ற தமிழறிஞர் வடமொழிக்கலப்பைஎதிர்த்துத் தனது பெயரையே மறைமலை அடிகள் என மாற்றினார் [வேதம் -மறை அசலம்-மலை). அவரது தீவிர தனித்தமிழ்ப்பற்றே ஒண்தீந்தமிழ் அழகோடு இன்றும் மிளிர வழி வகுத்தது....!

— மயூரன்

# ஏரியில் மிதக்கும் மர்மச் சடலங்கள்; விசாரணைக்கு சந்திரிகா உத்தரவு'

(கொழும்பு)

பாணந்துறை பொல்கொட ஏரியில் மிதந்துவரும் மர்மச் சடலங்கள் குறித்து புலன்விசாரணை நடாத்த அனுபவமிக்க இரகசிய பொலிஸாரை ஜனாதிபதி சந்திரிகா நியமித்துள்ளார்.

பொல்கொடஆற்றில்கடந்த கடந்த 50 நாட்களில் 30க்கும் மேற்பட்ட சடலங்கள் மிதந்து வந்துள்ளன. எவ்வளவு முயற்சிகளை படையினர் மேற்கொண்டபோதும் இச் சடலங்கள் எங்கிருந்து வருகின்றன என்பது பற்றிய விபரங்களை கண்டுபிடிக்க முடியவில்லையாம்.

மிகநீண்ட தூரமான இந்த ஆற்றில் மிதந்துவந்த 30 சடலங்களும் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டு முகமும் உடலின் ஏனைய சில பாகங்களும் சிதைக்கப்பட்ட நிலையிலேயே மீட்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் தமிழ் இளைஞர்களே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டு ஆற்றில் வீசப்படுவதாகவும் சந்தேகிக்கப்படுகிறது.

இதுகுறித்து உடன் விசாரணைகளை மேற்கொண்டு மர்மச் சடலங்கள் பற்றிய விபரத்தை கண்டறியுமாறு ஜனாதிபதி சந்திரிகா அனுபவம்மிக்க சில இரகசிய பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார் (சி)

## வெள்ளி விருந்து

### நாவலர் சாதனை

ஈழத்திலும் தமிழகத்திலும் சைவம் வாழ அவதரித்த ஆறுமுகநாவலர் ஐந்தாம் குரவராகக் கணிக்கப்படுகிறார் பிரசங்கம் மூலமும், நூல்கள் வாயிலாகவும்' துண்டுக் கட்டுரைகளாலும் தனதுவாழ்க்கையாலும் சைவத்தை ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் நிலை நாட்டினார்.

மதச்சீர்திருத்த வாதியாகவும் நாவலர் விளங்கினார், கோயில்களில் நடக்கும் ஊழல்களையும், அக்கிரமங்களையும் அவற்றிற்குக்காலாகிய கோயில் தர்மகர்த்தாக்களையும் காரசாரமாக விமர்சனம் செய்து அம்பலத்திற்கு இழுத்து போராடினார். சிவ ஆகம நிந்தனை செய்யும் தீட்சதர்களையும் பிரசங்கங்கள் மூலம் தாக்கினார். இவற்றின் மூலம் ஓர் சீர்திருத்தவாதியாகவும் திகழ்தார்.

மிகச் சுருங்கிய காலஎல்லையிற் பலதுறைகளிலே பெரும்பணி ஆற்றிய தனியொரு மனிதர் வேறெவரும் இல்லையெனலாம்; ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கையே இவையாவற்றையும் சாதிக்க ஆற்றல் அளித்தது.

பேராசிரியர்
சு. வித்தியானந்தன்

நாவலர்-150 வது
ஜயந்தி விழா மலர்)

# மலையகத்தில் தமிழ் பாடசாலைகளில் 240 சிங்கள ஆசிரியர்கள் நியமனம்

(கொழும்பு)

ஊவா மாகாணத்தில் தமிழ் பாடசாலைகளில் 240 ற்கும் மேற்பட்ட சிங்கள அசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊவா மாகாணத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளில் 500க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது. இதனை நிரப்புமாறு அப்பகுதி தமிழ் எம். பி. க்கள் பலர் அரசை பல தடவைகள் வற்புறுத்தி வந்தனர்.

இதையடுத்து தமிழர் பாடசாலைகளுக்கு 240 சிங்கள ஆசிரியர்களை அரசு கடந்த வாரம் நியமித்துள்ளது. இதையடுத்து தமிழ் பாடசாலை அதிபர்களும் பெற்றோரும் நலன்விரும்பிகளும் இதனைச் சுட்டிக்காட்டி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளதுடன் இது குறித்து மலையக எம். பிக்களின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளனர்.

இந்த நியமனங்களை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு மலையக தமிழ் எம். பிக்கள் சிலர் அரசுக்கு அவசர கடிதங்களை அனுப்பியுள்ளனர். சி

## மாணவர் அறிவியல் கழக விஞ்ஞான செய்முறைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யூலை 5 கரும்புலிகள் நாளை முன்னிட்டு மாணவர் அறிவியல் கழகத்தால் நடாத்தப்படும் ஆண்டு 10 மாணவர்களுக்கான அறிவியல் (விஞ்ஞான) செய்முறைப் போட்டி கீழ்காணும் நாட்களில் கோட்டப் பாடசாலைகளில் நடைபெறும்.

இம்மாதம் 30ம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 12 30 மணி -மருதங்கேணி பி.ப 1.30 மணி -பருத்தித்துறை பி.ப 3.00 மணி கரவெட்டி

யூலை 1ம் திகதி சனிக்கிழமை மு.ப 8 30 மணி- நல்லூர் மு.ப 10 30 மணி- யாழ்ப்பாணம் பகல் 12 30 மணி- ஊர்காவற்றுறை பி.ப 2 30 மணி- வேலணை பி.ப 3 30 மணி- தெல்லிப்பழை

யூலை 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 8 30 மணி- கோப்பாய் மு.ப 10 30 மணி- சங்கானை பகல் 12.30 மணி- சண்டிலிப்பாய் பி.ப 2.30மணி -உடுவில்

யூலை 3ம் திகதி திங்கட்கிழமை பகல் 12.00 மணி- பளை பி.ப 1.30 மணி- சாவகச்சேரி கி-ரி

**இயற்கை எம் உடமை – அதைக் காப்பது நம் கடமை**

# ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக்கு புதிய காலக்கெடு விதிக்க முயற்சி

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஆட்சிமுறை ஒழிப்புக்கு புதிய காலக்கெடு விதிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜூலை 15 க்குள் ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு அரசுக்கு தடங்கல் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

ஜூலை 15க்கு முன அதிகார பரவலாக்கல் சட்ட மூலம் தயாராக இல்லாததால் ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதையும் அத் தேதிக்கு முன் செய்ய இயலாதிருப்பதாக அரசு தரப்பில் தெரிவிக்கப் படுகிறது

இதேவேளை ஜூலை 15 க்கு முன் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பது கஷ்டமான விடயமாகும் என்றும் இதற்கு கால அவகாசம் வழங்குவது அவசியம் என்று இரு தமிழ் கட்சிகள் கருத்து வெளியிட்டுள்ளன.

ஜூலை 15க்குமுன் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை முடிவுக்கு கொண்டுவராவிட்டால் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசு பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் வாக்குறுதியில் தெரிவிக்கப்பட்டது போல ஜூலை 15 க்கு முன்னர் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறை மாற்றப்படாவிட்டால் ஜே. வி. பி. இயக்கம் அரசுக்கு எதிராக கடும் எதிர்ப்பு இயக்கம் ஒன்றை ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளது. குறிப்பிடத்தக்கது. -ரி

## அமைச்சர் பௌஸியிடமிருந்து தப்பிய டாக்டர்

(கொழும்பு)

கடமைநேரத்தில் ஆஸ்பத்திரியில் காணப்படாத டாக்டர் ஒருவரை கையும் களவுமாகப் பிடிக்கச்சென்ற சுகாதார அமைச்சர் பௌஸியிடமிருந்து டாக்டர் ஒருவர் தப்பிவிட்டார்.

தென்பகுதியில் ஆஸ்பத்திரி ஒன்றில் கடமையாற்றும்டாக்டர் ஒருவர் தனது கடமை நேரத்தில் அங்குஇராமல் அருகிலுள்ள தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் பணம்பெற்று நோயாளர்களை பார்வையிட்டுவந்துள்ளார். இவரைப்பற்றி பொது மக்கள் அமைச்சர் பௌஸிக்கு பல புகார்களை தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து அமைச்சர் பௌஸி அதிகாரிகள் சகிதம் அந்த டாக்டரை பிடிக்கச் சென்றபோது அவர் தப்பிவிட்டார் எனினும் இவர் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் பௌஸி அதிகாரிகளுக்கு கடும் உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

★ அதிகாரப் பரவலாக்கலும்

# ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பும் வெவ்வேறு விவகாரங்கள்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதும் அதிகாரபரவலாக்கலும் இரண்டும் வெவ்வேறு விவகாரங்கள் சில அரசியல் கட்சிகள் இரண்டு விவகாரங்களையும் ஒரே நேரத்தில் ஆராயப்படவேண்டும் எனக் கூறுவது சாத்தியமற்ற விடயமாகும்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ் ஹமீட் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்; இரண்டு விவகாரங்களுக்கு நேரடி தொடர்பு இல்லை. ஒரே நேரத்தில் இரண்டு விவகாரங்களையும ஆராய முற்பட்டால் பிரச்னை மேலும் சிக்கலடையும் என நான் கருதுகின்றேன் என்றார்.

இதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணியும் புளொட் அமைப்பும் இந்த இருவிவகாரங்களைசமகாலத்தில் ஆராய்ந்து சட்டமியற்ற வேண்டுமென அறிக்கை வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது கே-ரி

## பட்டதாரி ஆசிரியர்களுக்கு விரைவில் தகுந்தசம்பளம்

(கொழும்பு)

அரசசேவை பட்டதாரி ஆசிரியர்களுக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படுமென அரசு உறுதியளித்துள்ளது.

ஆசிரியர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்ட புதிய சம்பளத்திட்டத்தில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாக கண்டனம் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து பட்டதாரி ஆசிரியர்களின் சம்பளம் குறித்து விரைவில் பரிசீலிக்கப்பட்டு இதற்கு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அரசு பட்டதாரிகள் சங்கம் ஒன்றிடம் உறுதியளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஜி)

## அனர்த்தங்களைத் தடுக்க முன்னேடி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரப் பகுதியில் அனர்த்தங்கள் எதுவும் ஏற்படின் அதற்கான முன்னேடி நடவடிக்கையை மாநகராட்சி மன்றம் மேற்கொண்டுள்ளது.

அனர்த்தங்கள் ஏற்பட்டு மக்கள் இடம் பெயர்ந்தால் மக்களுக்கான குடிநீர், சுகாதாரம், மற்றும் மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளில் மாநகராட்சி மன்றம் ஈடுபட்டுள்ளது.

இதற்கமைய மண்எண்ணை பரல்களில் 100 சிறிய நீர் தாங்கிகளையும் மற்றும் மலசல கூடங்களையும் அமைத்துள்ளது. -170

## தேர்வு சான்றிதழ்

[உடுவில்]

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட இலங்கை சைவநெறித் தேர்வுக்குரிய சான்றிதழ்ளைபரீட்சை செயலாளரால் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இவ்வருடம் நடைபெற உள்ள தேர்வுக்கானவிண்ணப்பப்படிவங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 10ஓ-ரி

தென் பகுதியில்

## பொலிஸ் நிலையங்களில் தமிழர் பதியத்தேவையில்லை

(கொழும்பு)

தெற்கில் பொலிஸ் நிலையங்களில் தமிழர்கள் பதிவு செய்யத்தேவையில்லை சகல பொலிஸ் நிலையங்களுக்கும் இது தொடர்பான சுற்று நிருபங்கள் இன்னும் ஒரு சில தினங்களில் அனுப்பிவைக்கப் படும் என்று பொலிஸ்மா அதிபர் பிராங்கிடி சில்வா தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் தமிழர்கள் முன்னர் அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் தமது பெயர்களைப் பதிவு செய்யவேண்டும் என்ற விதி இருந்தது. இப்போது தமிழர்கள் தமது பெயர்களைப் பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யத் தேவையில்லை.

சில தமிழர்கள் தாமாகவே தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்கின்றனர். இது தவிர தமிழர்கள் தமது பெயர்களை பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யவேண்டுமென்ற கட்டாயமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார், ர.சி

## மீனவர் ஓய்வூதியம் விரைவில் அதிகரிக்கப்படும்

(கொழும்பு)

மீனவர்களின் ஓய்வூதியம் விரைவில் அதிகரிக்கப்படுமென்று கடற்தொழில் அமைச்சர் இந்திக குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சர் இது பற்றிமேலும் தெரிவிக்கையில் மீனவர்களின் ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் தற்போது அவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் 600ரூபா, விரைவில் 1500 ரூபாவாக அதிகரிக்கப்படும் மீனவர்களின் ஓய்வூதியத்தில் தற்போது 20 ஆயிரம் மீனவர்கள் மட்டுமே இருக்கிறார்கள் என்று கூறினார். வி-ரி

# அரபு நாடுகளில் 3 வாரத்தில் 3 இலங்கைப் பெண்கள் கொலை

(றியாட்)

மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் அங்கு கொலை செய்யப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

கடந்த இரண்டு வாரங்களில் மூன்று இலங்கையர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

குவைத்தில் பணியாற்றிய தமயந்தி என்ற பெண் கொலையாகியதை அடுத்து அது தொடர்பாக ஒருவர் கைதாகியுள்ளார்.

சவூதியில் சதிகா உம்மாவும், குவைத்தில் மற்றொருவரும் கொலை செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மத்திய கிழக்கு நாடுகளில் பணிப் பெண்களாக தொழில் பார்க்கும் இலங்கைப் பெண்கள் அண்மைக் காலங்களில் மிக மோசமான துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து மத்தியகிழக்கு நாடுகளில் பணிபுரியும் பணிப்பெண்கள் பலரை இலங்கைக்கு திருப்பி அழைப்பது குறித்து தொழில் அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது கே- சி

## இராணுவ ரீதியில் இனப்பிரச்னைக்கு தீர்வில்லை

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வை இராணுவ ரீதியல் பெற அரசு விரும்பவில்லை, எனினும் அத்தகைய ஒரு நிலைக்கு நெருக்கப்பட்டால் போரிட்டு வெற்றி பெறவும் அரசு தயாராக இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார்

ஜனாதிபதி மாளிகையில் இடம் பெற்ற 2 கோடியே 37 இலட்சம் ரூபா பாதுகாப்பு நிதி சேகரிப்பது. தொடர்பான வைபவமொன்றில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

பாதுகாப்பு நிதிக்கு சேகரிக்கப்படும் பணம் படையினரின் சேம நலனுக்கு மட்டுமேபயன்படுத்தப்படும். அது ஆயுதக் கொள்வனவுக்கு செலவு செய்யப்படமாட்டாது எனவும் கூறினர். கி-சி

★ கொழும்பில் ரூபா இரண்டரை லட்சத்தை

# தமிழ்வர்த்தகரிடம் கொள்ளையடித்தவர்களை பொலிஸ் அதிகாரி துரத்திப் பிடித்தார்

(கொழும்பு)

சி. ஐ. டி. பொலிஸ் என நடித்து பஸ்ஸில் சென்ற தமிழ் வர்த்தகர் ஒருவரிடமிருந்து இரண்டரை லட்சம் ரூபாவை கொள்ளையடித்துக் கொண்டு தப்பியவரை அந்த வழியால் வந்த தமிழ் பொலிஸ் அதிகாரி ஒருவர் துரத்திச் சென்று பிடித்தார்.

கொழும்பு கஸ்பாக் வீதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது; தனியார் பஸ் ஒன்றில் ஏறி தம்மை இரகசிய பொலிஸார் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு தமிழ் வர்த்தகர் ஒருவரிடமிருந்து இரண்டரை லட்சம் ரூபாவை அபகரித்து இரு நபர்கள் பஸ்ஸிலிருந்து குதித்து தப்பி ஓடினர்.

பணத்தை பறிகொடுத்த தமிழ் வர்த்தகரும் பஸ்ஸிலிருந்து குதித்து அபயக் குரல் எழுப்பிய போது, அவ் வழியால் வந்து கொண்டிருந்த கொழும்பு வாகனப் போக்குவரத்து பிரிவு உதவி பொலிஸ் அத்தியட்சகர் கே. அரசரட்ணம் சுமார் கால்மைல் தூரம் இரு கொள்ளையரையும் விரட்டிச் சென்று அவர்களை மடக்கிப் பிடித்து பணத்தை மீட்டதுடன் அந்த இருவரையும் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

இச் சம்பவம் நடைபெற்ற போது நூற்றுக்கணக்கான மக்கள் இதனை பார்த்து அந்த பொலிஸ் அதிகாரியைப் பாராட்டினர்.

பொலிஸார் நடத்திய விசாரணையின் போது இரு கொள்ளையரும் இராணுவத்திலிருந்து தப்பி ஓடியவர்கள் என்பதும் தெரியவந்துள்ளது. -சி

## அமைச்சர் தொண்டமான் நெருக்கடியில் சிக்குவார்

(கொழும்பு)

தொண்டமான் நெருக்கடிக்குள் சிக்குவார் என்று சிங்கள சோதிடர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக அமைச்சர் தொண்டமானுக்கு அரசுக்குள்ளும், எதிர்க்கட்சியினராலும் பெரும் நெருக்கடிகள் அதிகரித்து வருவதுடன் மலையகத்தில் ஏற்பட்டுள்ள பல போராட்டங்களும் அவருக்கு பெரும் தலைவலியை ஏற்படுத்தியுள்ளது;

ஜூலை 11 ம் திகதி மலையகம் முழுவதும் நடைபெறவுள்ள அடையாள வேலை நிறுத்தத்திற்கு அமைச்சர் தொண்டமான் தலைமையிலான இ. தொ. கா. வை தவிர ஏனைய கட்சிகள் ஆதரவு வழங்கியுள்ளதும் தெரிந்ததே; ரி- சி

நல்லூர் ஒ நூலகம்.

## வர்ணச்சிரம தர்மக் கொள்கை

# இக்காலத்துக்கு ஏற்றதா?

மாற்றம் சஞ்சிகை (பயணம் 03; பாதை 10. இதழில்) யில் கேள்வி பதில் பகுதியில் கரவெட்டியைச் சேர்ந்த மு. சாந்தன் என்பவரால கேட்கப்பட்ட கேள்வி இது.

இந்தக் கேள்விக்கு திரு. ஜெயராஜ் அவர்கள் 'எக்காலத்திற்கும் ஏற்றது'' என்று பதிலளிததுள்ளார். இந்தப் பதிலைப்படித்த போது அவரது தமிழிற் சொல்வதானல் ''பாவம ஜெயராஜ்'' என்றுதான் சொல்லத் தோன்றுகின்றது. வர்ணச்சிரம தர்மக் கொள்கை தமிழின் வரலாற்றில் புகுத்தப்படமுன் தனிச் செழுமையுடன் தமிழினம் மிக உன்னத நிலையில் வாழ்ந்ததாகவும், உலகில் ஈடு இணையற்ற, எவராலும் வெல்லப்பட முடியாத ஓர் இனமாகவும் வாழ்ந்ததாகவ வரலாற்ருய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அதுதான் தமிழர் தம் பொற்காலமென்றும் இன்று பேசப்படும் பழம் பெருமைகட்கும் ஆதாரமானதும் கூட என்பதை வரலாறு தெரிந்தவர்கள் மறுக்க மாட்டார்கள். வர்ணச்சிரம தர்மங்கள் [சாதி அமைப்பு முறை] புகுத்தப்பட்ட ஆரியர் வரலாற்ருேடுதான் தமிழர் தம் உயர் நிலை சரிவுபட்டது- வீழ்ச்சியுற்றது என்பதையும் தமிழ் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அதாவது வேதங்களைக்கற்காது. வேதங்கள்கூறும், எந்தவொரு சடங்கையும் செய்யாத ஒரு பார்ப்பனன் அரசனின் விருப்பத்திற் கிணங்க அவனுக்குச் சட்டத்தை விளக்குபவராக-அதாவது நீதிபதியாகப் பணியாற்றலாம். ஆனல் ஒரு சூத்திரன் [எவ்வளவுதான படித்திருந்தபோதிலும்] அவ்வாறு இருக்கமுடியாது.

இவ்விரு விதிகளுமே இச் சர்ச்சைக்குப் போதுமானதாகும். இவ்விதிகளின்படி குறித்த பதிலைச் சொன்ன திரு. ஜெயராஜ் அவர்களே இன்று செய்யும் பிரசங்கங்களையும், வேதபாராயண தெய்வீக உரைகளையும் ஆற்றமுடியாதவராகின்ருர். இதை அவர் புரிந்துகொள்ளவேண்டும். மேலும் தமிழின வரலாற்றில் எந்தவொரு காலத்திலும் தோற்றம் பெருத எழுச்சியும், வீரமும், தலைமைததுவமும் உன்னதமடைந்து உலகஇனங்களிடையே தமிழினமும் உன்னதமான ஒரு இனம் என்ற தோற்றப்பாட்டைத் தோற்றுவித்திருக்கும்போது - இவ்வெழுச்சிக்கு நேர்விரோதமான கருத்துக்களைததரும் பதில்களைத்தருபவர்கள் ''ஆரிய மாயையிலிருந்து இன்னமும் விடுபடாதவர்களாகவே கொள்ளலாம். வரலாற்றை மீட்டெடுத்து. எமது வரலாற்றை நிலைநிறுத்த உதவுவதற்குப் பதிலாக வரலாற்றைப்பின்தள்ளி, 'அடிமைச் சாதியாகி, எடுப்பார் கைப் பிள்ளைகளாக', வாழவிரும்புபவர்களே வர்ணச்சிரம தர்மத்தை விரும்பலாம், விரும்ப முடியும். மனித உரிமைகள் வென்றெடுக்கப்படவும் பாது, காக்கப்படவுமான போரில் ஏனைய உலக இனங்களும் ஈடுபட்டிருக்கும் இவ்வேளையில் இப்படியான பத்தாம் பசலித்தனமான வார்த்தைகளை இனங்கண்டு கொள்வோம்,

## மக்கள் கருத்து

வர்ணச்சிரம தர்மக்கொள்கைகளால் வீழ்ச்சியுற்ற தமிழினத்தைத் தட்டி எழுப்பத் திராவிடர் கழகமும்,பெரியார் ஈ. வெ. ரா. போன்றவர்களால் ஆரம்பிக்கப்பட்ட போராட்டங்களும், அறிஞர் அண்ணு அவர்கள் ''ஆரிய மாயை'' எழுதிச் சிறை சென்றது எல்லாம் மறந்துவிடக் கூடியதா? அல்லது மறுத்துத்தான் விடமுடியுமா?

சரி வர்ணச்சிரம தர்மம் கூறுவதுதானென்ன? இவ்விடத்தில் ஒருமுறை பார்ப்போம். (மனுவால் எழுதப்பட்ட ஆரியர்களின் சட்ட நூலான மனுமிருஸ்தியிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகள் இவை]

XI மற்ற மூன்று இரு பிறப்புச் சாதிகளும் [வர்ணம்] தங்களுக்கான கடமைகளை ஆற்றுவார்களாக வேதத்தைப் படிப்பார்களாக. ஆனுல் இவர்களில் பார்ப்பனன் மட்டுமே வேதத்தை மற்றவர்களுக்குக் கற்றுத்தரவேண்டும். ஏனைய இருவரும் அதனைச் செய்யக் கூடாது. இது நிலைநாட்டப்பட்ட விதியாகும்;

VIII. 20. பிறப்பினுல் மட்டுமே பார்ப்பனனுக உள்ள ஒரு பார்ப்பனன்

சாத்திரங்கள் பலதேடினேன்
அங்கு
சங்கையில்லாதன
சங்கையாம்
கோத்திரங்கள் சொல்லும்
மூடர்தம் பொய்மைக்
கூடையுள் உண்மை
கிடைக்கிமோ

எனப்பாடியபாரதி (ஹரிஜன) தாழ்ந்த குலத்துப்பையன் ஒருவனுக்கு பூநூல் தரித்து அவனுக்கு குருச்சடங்குகள்செய்து அவனைக்குருக்கள் ஆக்கி வர்ணச்சிரமதர்மத்திற்கு கொள்ளி வைத்து வர்ணச்சிரமதர்மத்தை எதிர்த்து சமூகமாற்றத்தை விரும்பி புதுமைகண்டும் புரட்சிகண்டும் கூத்தாடினுன். இவைகளையெல்லாம் மனதிற் கொண்டு இனிமேலாவது வர்ணச்சிரமதர்மத்தை'' 'எக்' காலத்திற்கும் ஏற்றதாக'' 'மறந்தும் சொல்லாமல் எண்ணுமல் இருக்கட்டும்.

**வளவை வளவன்**
மந்துவில்.

---

## ராணுவ தாக்குதல்களினுல்

# தீவக கூ. சங்கங்களுக்கு

## 2 கோடி ருபா பெறுமதி இழப்பு

(யாழ்ப்பாண)

1990- 1991-ம்ஆண்டுகளில் தீவகப்பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல்களின் போது தீவகப்பகுதி கூட்டுறவுச்சங்கங்களுக்கு இரண்டு கோடியே 16லட்சம் ரூபா பெறுமதியான இழப்புகள் ஏற்பட்டன.

தீவகப்பகுதி இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால் அங்கிருந்த ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவு. நயினுதீவு, காரைநகர் பலநோக்குகூட்டுறவுச் சங்கங்கள் இடம்பெயர்ந்து யாழ் நகரின் அண்டிய பகுதிகளில் செயற்படுகின்றன.

மேற்படி கூட்டுறவுச்சங்கங்களில் ஊர்காவற்றுறை கூட்டுறவுச்சங்கம் 1990-ம் ஆண்டு இராணுவ தாக்குதலுக்கு உட்பட்டது.

ஏனையவை 1991 ல் இராணுவ தாக்குதலுக்குட்பட்டன இவற்றிற்கான இழப்பீட்டு தொகை எதுவும் இதுவரை அரசினுல்வழங்கப்படவில்லை.ரி

---

## எட்டுப் பேர் கைது

(நெல்லியடி)

சூதாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த எட்டுப்பேர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

வல்வெட்டித்துறைப் பகுதியில் இச்சம்பவம் அண்மையில் இடம் பெற்றது. 160-ரி

## இன்றைய உதை பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவருத்திக்குழுவின் ஆதரவில் வலிகிழக்கு விளையாட்டுச் கழகங்களிக்கிடையே, பாஷையூர் சென் அன்ரனிஸ் கழக மைதானத்தில் இன்று நடைபெறும் ஆட்டங்களின் விபரங்கள் வருமாறு சென். மேரிஸ் எதிர் கலைவாணி, விண்மீன் எதிர் கென்னடி வடமராட்சி நெல்லியடி மத்திய மகா வித்தியால மைதானத்தில் இன்று, நக்கீரன் எதிர் ஞானம்ஸ், கழுகுகள் எதிர் கண்ணகி.

வலிகிழக்கு விளையாட்டுக் கழகங்களிடையே, யாழ் பல்கலைக் கழக மைதானத்தில் சனி, ஞாயிறு, நடைபெறவிருந்த ஆட்டங்கள் அனைத்தும் பிற்போடப்பட்டுள்ளது.

-வி-ரி

## இன்று

(வட்டுக்கோட்டை)

ஸ்ரீவள்ளி இசைநாடகம்வட்டுக்கோட்டைவீரபத்திரசிவன் கோவில் தெற்கு வீதியில் அமைக்கப்பட்ட மேட அரங்கில் இன்று 30ம் திகதி வெள்ளிக்கிழமை இரவுமேடையேற்றப்படவுள்ளது. - 139

0 0 0

(கொழும்புத்துறை)

சங்கானை பிரதேச சபை செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நிறுத்தல்- அளவைகள் உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி சங்கானை பிரதேசச் செயலாளர் பணிமனையில் இன்று 30ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். -154

0 0

(யாழ்ப்பாணம்)

பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் இன்று 30ம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 8.55 மணிக்கு தமிழ் விழா செல்வி த. ரமணி தலைமையில் நடைபெறும். முதன்மை விருந்தினராக திரு. த. துரைலிங்கம் கலத்துகொள்வார். (பிரதிக் கல்விப் பணிப்பாளர் நல்லூர்)

---

## இராசி பலன்

**30-06-1995**
வெள்ளிக்கிழமை
[தமிழுக்கு|ஆனி-16]

துதியை காலை 9-47 வரை, பூசம் பி. ப, 2-35 வரை: இராகுகாலம் காலை 10-26, முதல் 11- 56 வரை, சுபவேளை காலை 5-55 வரை, மரணயோகம்.

மேடம்: குடும்பவிரோதம், பணக்கஷ்டம், மனச்சுமை

இடபம்: தொழில் லாபம், விநோத சிந்தனை, பணவரவு

மிதுனம்: கண்ணில் ரோகம் வாக்கு பகை, வேதனை

கடகம்: புதியஉறவு.காரிய பலிதம், கலகலப்பு

சிங்கம்: குழப்பமடைதல், உறவினர் வருகை, தியாகம்

கன்னி: குடும்பசுகம், விருந்தினர் வருகை, தியாகம்

துலாம்: தொழில் முதலீடு, வாதத்திறமை, பாராட்டு

விருச்சிகம்: உள்ளக்குமுறல் தொழில் நஷ்டம், அலைச்சல்

தனுசு, தொழில் முரண்பாடு, குடும்பபிரிவு, பிறர் துன்பம்

மகரம்: அதிகார சிறப்பு. விருந்தோம்பல், வெகுமதி

கும்பம்: நண்பர் சகவாசம். புதிய முயற்சி, இனியகனவு

மீனம்: வேலைப்பழு, இனம்புரியாதபயம், பணக்கஷ்டம்

— ஜோஸ்யர்


# மாணவர் கலைப் பூங்கா 3

கலைக்களம்: யாழ் நாகர் கோவில் மகாவித்தியாலயம்

காலம்: இன்று 1995 – 06 – 30 வெள்ளிக்கிழமை
நேரம்: மாலை 7.30 மணி

## நிகழ்ச்சி நிரல்

★ ஈகைச் சுடரேற்றல்
திரு. ராஜி மாஸ்டர் அவர்கள்
(தளபதி கடற்புலிகள் யாழ். மாவட்டம்
செல்வி ச. ஈழத்தரசி அவர்கள்
(பொறுப்பாளர் கடற்புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பிரிவு யாழ். மாவட்டம்)

★ அமைதி வணக்கம்

★ தமிழ்த்தாய் வாழ்த்து
(யா/நாகர் கோவில் மகாவித்தியாலயம்)

★ வரவேறபுரை
குழையூரான் திரு. ச. மார்க்கண்டு அவர்கள்
(தொடர்பாளர், கலை பண்பாட்டுபிரிவு, விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு தமிழீழம்)

★ தலைமையுரை
திரு. ந. இன்பன் அவர்கள்
(பொறுப்பாளர். விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, தமிழீழம்)

★ தொடக்க உரை
திரு. ஜெ. அரவிந்தன் அவர்கள்
(பொறுப்பாளர், கடற்புலிகள் மாணவர் அமைப்பு, யாழ். மாவட்டம்)

★ சிறப்பு விருந்தினர் உரை
1. செல்வி சுகி அவர்கள்
(பொறுப்பாளர், கடற்புலிகள் மகளிர் அமைப்பு, யாழ் மாவட்டம்)
2. திரு. க. செல்வராசா அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், மருதங்கேணிக் கல்விக் கோட்டம்)
3. திரு. வே. சிலம்பரசன் அவர்கள்
(பொறுபபாளர், அரசியல்துறை கடற்புலிகள் யாழ் மாவட்டம்)

★ சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்கல்
பிரதம விருந்தினர்
திரு. கங்கை அமரன் அவர்கள்
(தளபதி, கடற்புலிகள் தமிழீழம்)

★ நன்றியுரை
திரு. ச. நெடுஞ்செழியன் அவர்கள்
(இணைப்பாளர், கலை பண்பாட்டுப் பிரிவு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு தமிழீழம்)

★ கலைப்பூங்காவில்

1. ★ சிறுவர் நாடகம்
(யா/மணற்காடு அ. த. க. பாடசாலை)
2. ★ சாஸ்திரிய இசை
(யா/நாகர் கோவில் மகாவித்தியாலயம்)
3. ★ சாஸ்திரிய நடனம்
(யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்)
4. ★ கிராமிய இசை
[யா/புலோலி மெ. மி. த. க. பாடசாலை]
5. ★ கிராமிய நடனம்
(யா/உடுத்துறை மகா வித்தியாலயம்)
6. ★ வில்லுப்பாட்டு
(யா/யாக்கரு விநாயகர் வித்தியாலயம்)
7. ★ சமூக நாடகம்
(யா/அல்வாய் அம்பாள் வித்தியாலயம்)
8. ★ வரலாற்று நாடகம்
(யா/அல்லாரை அ. த. க. பாடசாலை)
9. ★ ஒரு தேடல் — நாடகம்
(யா/திருமறைக் கலாமன்றம்)

கலை விருந்துகாண களம் நோக்கி வாரீர்
– நன்றி –
கலைபண்பாட்டுப் பிரிவு
விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு
தமிழீழம்

வாழ்த்துபவர்கள்:
கரைவலை உரிமையாளர் சங்கம்
வடமராட்சி கிழக்கு

]எ5057]

## இலங்கை அரசுக்கான அமெரிக்க உதவியை எதிர்த்து சென்னையில் ஆர்ப்பாட்டப் பேரணி!

[சென்னை]
இலங்கை அரசிற்கு அமெரிக்கா ஆதரவளிப்பதை எதிர்த்து சென்னையில் பாட்டாளி மக்கள் கட்சி ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நடாத்தியுள்ளது.

பாடடாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ் தலைமையில் இந்த ஆர்ப்பாட்டப்பேரணி கடந்த திங்கட்கிழமை நடாத்தப்பட்டது.

இந்தியாவுக்கு அண்மையில் விஜயம் செய்த அமெரிக்க அரசின் தூதுவர் ஒருவர் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைக்கு எதிரான இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைக்கு அமெரிக்கா உதவுமெனத் தெரிவித்திருந்தார்.

இதனை ஆட்சேபித்தே இந்த ஆர்ப்பாட்டப்பேரணி மேற்கொள்ளப்பட்டது.

பேரணியில் கலந்துகொண்டோர் இலங்கை அரசிற்கு எதிரான சுலோகங்களைத் தாங்கியபடி காணப்பட்டனர். கி

## வைத்தியசாலை மீதான கலிபர் தாக்குதல் குறித்து கொழும்புக்கு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)
நேற்றுமுன்தினம் மாலை மண்டைதீவுப் பகுதியிலிருந்து இராணுவத்தினரால் யாழ். போதனா வைத்தியசாலை மீது மேற்கொள்ளப்பட்ட கலிபர் தாக்குதல் குறித்து வைத்தியசாலை நிர்வாகத்தினால் சுகாதார அமைச்சுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலை பதில் பணிப்பாளர் டாக்டர் திருமதி றஞ்சி இராஜராஜேஸ்வரன் யாழ். செயலக தொலைபேசி மூலம் சுகாதார அமைச்சு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வைத்தியசாலையில் இராணுவத்தினர் மேற்கொண்ட கலிபர் தாக்குதல் சம்பவத்தை விரிவாகஎடுத்துக் கூறியதுடன் தொடர்ந்து இச்சம்பவம் இடம்பெறுமலிருப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். அரசாங்கஅதிபர் பாதுகாப்புஅமைச்சுக்கும் முறைப்பாடு செய்திருப்பதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. 170-கி

## கோதுமை மாவுடன் 'ஹபரண' நாளை புறப்படுகிறது

(யாழ்ப்பாணம்)
திருகோணமலைத்துறைமுகத்தில் தற்பொழுது தரித்து நின்று யாழ் மாவட்டத்துக்கு வேண்டிய ஒரு தொகுதி மாவை ஏற்றிக்கொண்டு 'ஹபரண' கப்பல நாளை முதலாம் திகதி சனிக்கிழமை பருத்தித்துறை துறைமுகத்தை நோக்கிப் புறப்படுமெனச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கப்பலில் யாழ். மாவட்டத்துக்கு வேண்டிய 1950 மெதொன் மா எடுத்துவரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொழும்புத் துறைமுகத்தில் மண்ணெண்ணெய் மற்றும் உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு நிற்கும் மாகோ கப்பல் விரைவில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுவதாகவும், யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு வேண்டிய உரவகைகள் இக்கப்பலில் எடுத்துவரப்படவிருந்தபோதிலும் இதற்கான அனுமதி கூட்டுப்படைத்தலைமையகத்தினால் வழங்கப்படாததைத் தொடர்ந்து இக்கப்பலில் உரவவகைகள் எடுத்துவரப்படவில்லையென்றும் இதற்குப் பதிலாக சவர்க்காரம், தேங்காய்எண்ணைபோன்றவைகள் எடுத்துவரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 162-170-கி

## எவ். எம். ஒலிபரப்பில் இராணுவத்தினரின் கடிதங்கள்

(யாழ்ப்பாணம்)
வடபகுதிகளிலுள்ள இராணுவ முகாம்களில் கடமையாற்றும் இராணுவத்தினர் தமது குடும்பத்தினருக்கு எழுதும் கடிதங்கள் அனைத்தும், பலாலியிலிருந்து விசேடமாக ஒலிபரப்பப்படும் ''எவ். எம்'' வானொலிச் சேவையில் நண்பகலில் வாசிக்கப்படுகின்றன.

விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலினால் கொழும்புக்கும் - பலாலிக்குமிடையிலான விமானப் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டதினால் இராணுவத்தினர் தமது உறவினருக்கு எழுதும் கடிதங்களும் அவர்கள் இவர்களுக்கு எழுதும் கடிதங்களும் தற்போது சம்பந்தப்பட்டவர்களுக்கு கிடைக்காமல் போய்விட்டது.

இதனால் வடபகுதியிலுள்ள இராணுவத்தினரின் நலன்களை உறவினர் தெரிந்துகொள்ளும் முகமாக பலாலியில் இயங்கும் விசேட 'எவ். எம். வானொலி சிங்கள சேவையில் தற்போது இக்கடிதங்கள் வாசிக்கப்படுகின்றன,

இதே போன்றுதான் மற்றைய இராணுவத்தினரும் தத்தமது நிலைப்பாடுகளை தெரிவித்து எழுதிய கடிதங்கள் வாசிக்கப்படுகின்றன.

ஒரு கடிதம் வாசிக்க முன்பு, இராணுவ சிப்பாயின் பெயர், அவர் கடமையாற்றும் இராணுவப் பிரிவின் பெயர், அவர் இராணுவத்தில் என்ன பதவியில் இருக்கின்றார் என்ற விபரங்களும், அவர் யாருக்கு முகவரியிட்டு கடிதம் எழுதியுள்ளார் என்ற விபரங்களும் வாசிக்கப்பட்ட பின்பே அவரின் கடித விபரம் வாசிக்கப் படுகின்றது.

மண்டைதீவிலிருந்து தப்பிய பல இராணுவத்தினர் தாம் உயிருடன் இருப்பதாக இவ் ஒலிபரப்பின் மூலம் தமது உறவினருக்கு தெரியப்படுத்தியதை நேற்று யாழ்ப்பாணத்தில் செவிமடுக்கக் கூடியதாக இருந்தது. வி கி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683613.

## அழிக்கப்பட்ட
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
இவர்களில் இரு அதிகாரிகள் உட்பட 86 படையினரும், நான்கு இராணுவ சிவில் ஊழியர்களும் அடங்குவரெனவும் சரத் முனசிங்க அறிவித்துள்ளார்.

மீட்கப்பட்ட சடலங்களின் அடிப்படையிலேயே இத்தொகை கணிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் சடலங்கள் தற்போது மீட்கப்பட்டு வருவதனால் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் தொகை மேலும் அதிகரிக்கலாமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இத்தாக்குதலில கொல்லப்பட்டோரின் தொகை இதைவிட அதிகமானது என இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி பி. பி. ஸி., வெரித்தாஸ் வானொலிகள் அறிவித்துள்ளன.

பி.பி ஸி. யின் உலகசேவைக்கு அதன் கொழும்புச்செய்தியாளர் வழங்கியுள்ள தகவலில் கொல்லப்பட்ட படையினரின் தொகை 150 எனத் தெரிவித்துள்ளார். அகில இந்திய வானொலியும் இதேதொகை இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

வெரித்தாஸின் சிங்கள ஒலிபரப்பு 126ராணுவம் மண்டைதீவில் கொல்லப்பட்டதாகவும், 33 பேர் காயமடைந்ததாகவும், 24 பேரை காணவில்லையெனவும் கூறியுள்ளது.

'வீரகேசரி' பத்திரிகை மண்டைதீவு இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெளியிட்டுள்ள செய்தியில் இராணுவத்தில் 100 க்கும் அதிகமானோர் பலியாகியுள்ளதாக தெரிவித்துள்ளது.

இத்தாக்குதல் குறித்து பாதுகாப்புத் தலையையகம் நேற்று விடுத்த அறிக்கையொன்று பின்வருமாறு கூறுகிறது.

### கடலேரியால் வந்து தாக்கினர்

கடலேரி வழியாக வந்த ஆயிரக்கணக்கான புலிப்படையினர் மண்டைதீவு முகாம் மீது திடீர் தாக்குதலை மேற்கொண்டனர்.

### படையினர் சிதறி ஓடினர்

இத்தாக்குதலின் போது எல்லாத் திசைகளிலும் சிதறி ஓடிய படையினர் இப்போது முகாமுக்கு திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

### பதுங்குகுழிகளில் படையினர்

படையினர் மண்டைதீல் தற்போது பதுங்குகுழிகளில் நிலை கொண்டுல்ளனர். -கி

## வீரச் சாவடைந்தோருக்கு குடாநாடெங்கும் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)
மண்டைதீவு இராணுவ முகாம் அழிப்பின்போது வீரச் சாவடைந்த எட்டு விடுதலைப புலி போராளிகளுக்கும் யாழ். குடாநாட்டு மக்கள் நேற்று அஞ்சலி செலுத்தினர்

யாழ். குடாநாட்டின் தென்மராட்சி, வடமராட்சி வலிகாமம் உட்பட பல்வேறு பகுதிகளிலும் சிவப்பு, மஞ்சள், நீலம் போன்ற கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன வீதிகளில் வாழைகள், தோரணங்கள் கட்டப்பட்டுள்ளதோடு ஒலிபெருக்கி மூலம் சோக கீதங்களும் இசைக்கப்பட்டு வருகின்றன.

வீரச்சாவடைந்த லெப். கேணல் சூட்டி உட்பட எட்டுப் போராளிகளின் திருவுருவப் படங்களும் பல்வேறு இடங்களில் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது.

வடமராட்சி பகுதி எங்கும் கறுப்புக் கொடிகள் தொங்கவிடப்பட்டும் மாவிலை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள, பொதுஸ்தாபனங்கள் எங்கும் அஞ்சலி செலுத்தப்படுகின்றது. -51·90-170-கி

## மதவாச்சியில் பலியானோரில் பொலிஸ் அதிகாரியும் ஒருவர்

(கொழும்பு)
மதவாச்சி ஹெப்பிட்டிகொல்லாவ பகுதியில் நேற்றுமுன்தினம் நண்பகல் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்ட எட்டு பொலிசாரில் ஒருவர் சப் - இன்ஸ்பெக்டர் தரத்திலானவர் எனவும், மற்றொருவர் பொலிஸ் சார்ஜண்ட் எனவும் நேற்று அரசு அறிவித்தது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்ட பௌத்த பிக்குவின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

பொலிசாரின் மீது தாக்குதலை மேற்கொண்டோர் அவ வழியால் வந்த இரு பஸ்களை மறித்து அதில்ராணுவத்தினர் இருக்கிறார்களா எனத் தேடுதல் நடாத்தியதாகவும், மற்றொரு 'எல்ப்' வண்டியும் தாக்குதலுக்கு உள்ளானதாகவும் நேற்றிரவு 'ரூபவாஹினி' தெரிவித்தது.

தீவிரவாதிகளின் நடமாட்டம் காணப்படுவதாக பொது மக்கள் தெரிவித்த தகவலை தொடர்ந்து அவர்களை தேடி சென்ற பொலிஸ் கோஷ்டியே தாக்குதலுக்கு உள்ளானது.

இத்தாக்குதலின் போது ஸ்ரீலங்கா பொலிசாரிடம்

- ★ ரி-56 ஒன்று ரகத் துப்பாக்கிகள்-07
- ★ ஏ. கே. ரக துப்பாக்கி ரவைக் கூடுகள்-27
- ★ அதற்குரிய ரவைக் கூடு தாங்கி அணிகள்-07
- ★ நடுத்தர ரவைகள் - 778
- ★ பொறிக் குண்டுகள் - 04
- ★ பொலிஸ் செற் - 04
- ★ சப்பாத்துக்கள், தொப்பிகள் என்பனவும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. -க-கி

## மண்டைதீவு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் அட்டை பிடித்துக் கொண்டிருந்த ஐவரில் ஒருவரான குருநகர் பற்றிக்ஸ் வீதியைச் சேர்ந்த இம்மானுவேல் அனுஷன் (18 வயது) என்பவரே படுகாயமடைந்தவராவார்,

படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். -90-179-கி

## சந்திரிகாவின்
[1-ம் பக்கத் தொடர்ச்சி]
னர் பலியான சம்பவத்தால் சந்திரிகாவின் மனநிலை பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அதனால் பிறந்தநாள் கொண்டாட்டங்களை அவர் ரத்துச் செய்துவிட்டு தனது இரு பிள்ளைகளுடன் மத வழிபாட்டில் மட்டுமே நேற்று கலந்து கொண்டதாகவும் அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன. கி

## ஒப்பந்த
(1ம் பக்கத் தொடர்ச்சி)
படை, கடல் படையினரின் உதவிகள் ஏதுமின்றி மண்டைதீவில் இருந்த இராணுவத்தினர் விடுதலைப் புலிகளை நேருக்கு நேர் நின்று போரிட்டுள்ளார்கள்.

இராணுவத்தினர் மண்டைதீவில் மிகவும் விழிப்பாக இருந்த போதிலும் விடுதலைப் புலிகள் நன்கு திட்டமிட்டு மிகத் திறமையசக இராணுவத்தினரைத் தாக்கியுள்ளார்கள்.

ஆயிரக் கணக்கான விடுதலைப் புலிகள் மண்டைதீவினுள் ஊடுருவியுள்ளார்கள். இதை உற்றுப்பார்க்கும்போது மண்டைதீவைத் தாக்குவதற்கு விடுதலைப்புலிகள் நீண்ட காலமாகவே திட்டம்தீட்டி வந்திருப்பது தெரியவருகிறது என்று கூறினார். வி கி

## இன்று பரிசளிப்புவிழா

(வடமராட்சி]
இமையாணன் த.க. பாடசாலையில் பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற ஆங்கில தினப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் பாடசாலை மண்டபத்தில் இன்று 30ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது. 51

## புல்மோட்டையில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
இராணுவத்தினர் பயணம் செய்த ஜீப் வண்டி கண்ணிவெடியில் சிக்கியதும் சிதறி தூக்கி வீசப்பட்டது. அதில் பயணம் செய்த இராணுவத்தினர் அறுவரும் கொல்லப்பட்டனர். எவரும் உயிர் தப்பவில்லை. க-கி

## இராணுவத்துக்கு
(1ம் பக்கத் தொடர்ச்சி)
'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' இது குறித்த விமர்சனத்தில் இராணுவம் வடபகுதி மீதான தாக்குதலை எவ்வாறு வெற்றிகரமாக மேற்கொள்ளப் போகிறது என சந்தேகம் தெரிவித்துள்ளது. க-தீ-கி

## ஹெப்பிட்டிகொல்லா
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வும் கிராமத்தை விட்டு வெளியேற அவர்கள் தயாராகி வருவதாகவும் . தகவல்கள் தெரிவிக்கின்றன.

பலர் ஏற்கனவே பாதுகாப்புத் தேடி வேறு பகுதிகளுக்கு சென்று விட்டனர்,

இதனைத் தொடர்ந்து அப் பகுதியில் இராணுவ-பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக 'ரூபவாஹினி' நேற்றிரவு தெரிவித்தது.

படையினர் மேலதிக முகாம்களை அப்பகுதியில் அமைக்காமல் நடமாடும் ரோந்து சேவையையே மேற்கொள்வதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. -கி